


சேலம் மத்திய மாவட்டம், அஸ்தம்பட்டி பகுதி கழகத்தின் சார்பில், வடக்கு சட்டமன்றத் தொகுதியில், தி.மு.க. இளைஞரணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற்ற கூட்டத்தில் கழக வழக்கறிஞர் அணி இணைச்செயலாளர் இ.பரத்தாமன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார். சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் தலைமை வகித்தார். மேயர். ஆ ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி அலுவலகம்!

## வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் நாளை அமைச்சர் எஸ்.முத்துசாமி திறந்து வைக்கிறார்!

ஈரோடு,மார்ச்.11-

முதலமைச்சரும் கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் நல்வாழ்த்துகளுடனும், துணை முதலமைச்சரும், இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடனும் ஈரோடு, அகில்மேடு 6 வது வீதி, 24/4 எம்.ஆர். ஜி.என் டவர்ஸில் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை நாளை (12.3.2025) ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் தலைமையில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைக்க உள்ளார்.

திறப்பு விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மத்திய மாவட்ட செயலாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர். மேலும் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பரிந்துரையை ஏற்று

# ரூ.51,14,604 மதிப்பில் 21 பேருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதி உதவி!

நாமக்கல், மார்ச். 11-

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பரிந்துரையை ஏற்று கடந்த 2024 ஜூன் மாதத்திற்கு பின் 2025 பிப்ரவரி மாதம் வரை 21 நபர்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ.51,14,604 தொகையை இருதய நோய், புற்று நோய், நாள்பட்ட சிறுநீரக நோய் போன்ற பல்வேறு நோய்களுக்கான நிவாரண தொகை வழங்கப் பட்டுள்ளது

பிரதமரின் தேசிய நிவாரண நிதி உதவி பெற்றவர்களின் விவரம்:

கோயம்புத்தூர் ஜி. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனையில் கார்சினோமா வலது மார்பக நோயால் பாதிக்கப்பட்ட நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ஒன்றியம் குருசாமி பாளையத்தை சேர்ந்த எஸ்.ரூபினிக்குமருத்துவ நிதியாக ரூ.122476, .

புதுச்சேரியில் ஜவஹர்லால் இன்ஸ்டிடியூட் ஆஃப் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (ஜிப்மர்) மருத்துவமனையில், நாள்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நாமக்கல் சேலம் சாலை, காவேரி நகர், என்.ஜி.ஓ.எஸ். காலனியைச் சேர்ந்த கௌதம், (32) என்பவருக்கு மருத்துவ நிதியாக ரூ. 225000,

புதுச்சேரியில் ஜவஹர்லால் இன்ஸ்டிடியூட் ஆஃப் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி (ஜிப்மர்) மருத்துவமனையில், , லங்காநத்தம் பகுதியைச் சேர்ந்த முருகேசன், வயது 54, மருத்துவ நிதியாக ரூ.300000,

புதுச்சேரி (ஜிப்மர்) ஜவஹர்லால் இன்ஸ்டிடியூட் ஆஃப் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மருத்துவமனையில் AML நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளவரசன், (2 1) க்கு மருத்துவ நிதியாக ரூ. 300000,

கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனை லிமிடெட், கோயம்புத்தூரில் (கே.எம்.சி.எச்) இறுதி நிலை சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட சிகிச்சை பெற்று வந்த ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி (தொகுதி), நஞ்சை ஊத்துக்குளியைச் சேர்ந்த எம்.நரேஷ் குமார் (வயது 35), அவருக்கு மருத்துவ நிதியாக பிரதமரின் தேசிய நிவாரண நிதியின் மூலம் ரூ.300000, அவர் கோயம்புத்தூரில் உள்ள ஜி.குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனையில் டிரிபிள் வெசல் கரோனரி ஆர்டரி நோயுடன் இடது பிரதான நோயால் பாதிக்கப்பட்ட சிகிச்சை பெற்று வந்த ஆர். சுப்பிரமணிக்கு மருத்துவ நிதியாக ரூ.50000, வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் மெட்டாஸ்டேடிக் நியூரோ பிளாஸ்டோமா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ராசிபுரம், காக்காவேரி அன்யா மெரோலினுக்கு மருத்துவ நிதியாக ரூ. 300000,

புதுச்சேரியில் உள்ள ஜவஹர்லால் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் மெலனோமா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த செல்வி பெருமாள் (வயது48) , அவருக்கு மருத்துவ நிதியாக ரூ. 300000,

கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனையில், கோயம்புத்தூரில் இறுதி நிலை சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சேந்தமங்கலம், கல்குருச்சி வெள்ளாலப்பட்டி பகுதியைச் சேர்ந்த துரை கண்ணன் (வயது46 ) அவருக்கு மருத்துவ நிதியாக மூலம் ரூ. 300000,

புதுச்சேரி (ஜிப்மர்) ஜவஹர்லால் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மருத்துவமனையில் ALL வகையான நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த கிருதிச்சேஸ்வரன் (வயது11), அவருக்கு மருத்துவ நிதியாக ரூ. 250000,

கோயம்புத்தூரில் உள்ள ஜி.குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனையில் கார்சினோமா வலது பரோடிட் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நாமக்கல் ஏ.வீரசாமி (வயது67), அவருக்கு மருத்துவ நிதியாக ரூ. 14032, ஸ்ரீ ராமச்சந்திர மருத்துவ மையத்தில் கடுமையான மைலாய்டு லுகேமியா (AML with monocytic differencation) அவருக்கு கடுமையான மைலாய்டு லுகேமியா (AML with monocytic differencation) நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ராசிபுரம் சுபரிநாதனின் மகன் மாஸ்டர் யுவா பிரியன் (வயது 3). அவருக்கு மருத்துவ நிதியாக ரூ. 224851,

கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனை லிமிடெட், கோயம்புத்தூரில் வலது மார்பக புற்றுநோய் T2 N0 M0 (ஹெர்2 பாசிட்டிவ்) நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நாமக்கல் மோகனூர் சாலை, கொண்டிசெட்டிபட்டி ஆர். ஸ்வாதி (வயது 26). அவருக்கு மருத்துவ நிதியாக ரூ. 128245,

கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனை லிமிடெட், கோயம்புத்தூரில் (கே.எம்.சி.எச்) இறுதி நிலை சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சேலம் கங்கவள்ளி, தம்மம்பட்டியைச் சேர்ந்த சி. ராஜேந்திரன் (வயது 57) அவருக்கு மருத்துவ நிதியாக ரூ. 300000 பெற்று தந்துள்ளார்.

வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வனிதாவுக்கு மருத்துவ நிதியாக ரூ. 300000, கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனை லிமிடெட், கோயம்புத்தூரில் (கே.எம்.சி.எச்) இறுதி நிலை சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவருக்கு நாமக்கல திண்டமங்கலம். ஜி.விஜயகுமார் (வயது 54), மருத்துவ நிதியாக ரூ. 300000,

புதுச்சேரியில் உள்ள ஜவஹர்லால் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ALL நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ஷோபியா சூர்யா (வயது19), மருத்துவ நிதியாக ரூ. 250000,

. வேலூர், ராணிபேட்டை வளாகத்தில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் (சிஎம்சி) பி செல் அக்யூட் லிம்போபிளாஸ்டிக் லுகேமியா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சந்திரசேகரன். பி. மருத்துவ நிதியாக ரூ. 300000

கோயம்புத்தூரில் உள்ள ஜி.குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனையில் கார்சினோமா வலது மார்பக நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ராசிபுரம் நாமகிரிப்பேட்டை, ,எஸ். கஸ்தூரி (வயது54) மருத்துவ நிதியாக ரூ. 250000,

புதுச்சேரியில் உள்ள ஜவஹர்லால் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் AML (ACUTE MYELOID LEUKEMIA) நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த கலைமகள் (வயது 39), அவர் மருத்துவ நிதியாக ரூ.300000,

கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனை லிமிடெட், கோயம்புத்தூரில் சிறுநீரக செயலிழப்பு பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நாமக்கல் அர்த்தனாரி பள்ளி தெரு, . லதா (வயது 40) மருத்துவ நிதியாக பிரதமரின் தேசிய நிவாரண நிதியின் மூலம் ரூ. 300000 என பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ.51,14,604 தொகையை 21 நபர்களுக்கு இருதய நோய், புற்று நோய், நாள்பட்ட சிறுநீரக நோய் போன்ற பல்வேறு நோய்களுக்கான நிவாரண தொகை

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பரிந்துரை செய்து மருத்துவ நிவாரண நிதியை பெற்று தந்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மார்ச் 1 அன்று நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் பிறந்த இரண்டு பெண் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டு பிறந்த குழந்தைகளுக்கு தங்கமோதிரம் அணிவித்தும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு பெட்டகம் உள்ளிட்டவற்றை வழங்கினார்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் பூம்புகாரில் சுற்றுலாத்துறையின் சார்பில் ரூ.23 கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா வளாகம் மேம்படுத்தப்பட்டு வருவதை சுற்றுலாத்துறை அமைச்சர் .ஆர்.ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் , சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம்.முருகன், எம்.பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, இலமேகநாதன், ஒன்றிய கழக செயலாளர்கள் பஞ்சு குமார், ஏ .ஜி.ஜே பிரபாகர் மற்றும் பலர் உள்ளனர்.

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் - பர்கூரில் ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டனப் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, மார்ச்.11

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் மார்ச் 5 ம் தேதி அன்று சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாடு அரசியல் பிரநிதித்துவத்தை குறைக்கும் மோடி அரசின் அநீதியை மக்களிடம் கொண்டு சென்று, அதன் பேராபத்தை எடுத்துக் கூற வேண்டும் என்றும், தொகுதி மறுசீரமைப்பினால் பாதிக்கப் படப் போகும் மாநிலங்களை ஒன்றிணைந்து "கூட்டு நடவடிக்கை குழு" வை அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



அதன்படி கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் ஏழு மாநிலங்களைச் சேர்ந்த 29 கட்சிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக திமுக சார்பில் நாளை (மார்ச் 12 ஆம் தேதி புதன் கிழமை) "தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்" என்ற தலைப்பில் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பொதுக் கூட்டம் மாவட்ட கழகம் சார்பில் நடைபெறும் எனவும் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை குறைத்து நம்மை இரண்டாம்தர குடிமக்களாக நினைக்கும் மோடி அரசின் சதியை மக்களிடம் எடுத்துக் கூறும் விதமாகவும் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தித் திணிப்பை மேற்கொள்வதை மக்களிடம் புரிய வைக்கும் விதமாகவும் மாவட்ட கழகங்கள் தோறும் விழிப்புணர்வு பொதுக்கூட்டங்கள் நடத்த வேண்டும் என கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்கவும்,

கழக இளைஞரணிச் செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக பர்கூரில் நாளை (12.03. 2025 புதன்கிழமை) மாலை 0500 மணிக்கு பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் ஆர். எஸ். பாரதி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், பவானி கண்ணன், பேர்ணாம்பட்டு ராஜேந்திரபிரசாத் ஆகியோர் கருத்துக்களை எடுத்துரைக்க உள்ளனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் நடைபெற உள்ள இந்த பொதுக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், BLA 2, BLC, கிளைக் கழக செயலாளர்கள், வார்டு, வட்ட கழக செயலாளர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நிவேதா எம்.முருகன் தலைமை! மங்கை எம்.சங்கர் வரவேற்புரை!

# மங்கைநல்லூரில் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்!

## திருச்சி என்.சிவா எம்.பி. சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம் – எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

மயிலாடுதுறை. மார்ச்.11

மயிலாடுதுறை மாவட்டம் குத்தலம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொது கூட்டம் மங்கைநல்லூரில் நடைபெற்றது. பிறந்த நாள் விழா பொது கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். குத்தாலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் மங்கை எம். சங்கர் வரவேற்புரையாற்றினார்.

கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், குத்தாலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கு.வைத்தியநாதன், குத்தாலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா ஆகியோர் தொடக்க உரையாற்றினார்கள். மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் கே.மகேந்திரன், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கிதாமாரியப்பன், முன்னாள் ஒன்றியக் குழு துணைத்தலைவர் இரா.முருகப்பா, குத்தாலம் பேரூர் செயலாளர் எம்.சம்சுதீன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜயாராஜேந்திரன்,

ஒன்றிய நிர்வாகிகள் ஏ.சுந்தரராஜன், எம்.பாலு, சக்திரவிச்சந்திரன், என்.என்.முரளி, எம்.பி.கணேசன், ஏ.எஸ்.எழிலரசன், எஸ்.நெடுமாறன், வி.ஆர். மகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், மாநிலங்களவைக் குழு தலைவருமான திருச்சி என்.சிவா எம்.பி., சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை. சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம். சித்திக், மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மகா. அலெக்சாண்டர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பி. எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், மூவலூர் எம். மூர்த்தி, ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஜி. ஜெ.பிரபாகர், செல்லசேது. ரவிக்குமார், நகர கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா, பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், ஜெ.கபிலன், நத்தம் வின்சென்ட், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம். கே.மருது உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

முடிவில் எம். சிங்காரவேலவன் நன்றி கூறினார்.




திருச்சிராப்பள்ளிசமயபுரம்,ரெட்டியார்மஹாலில்குறு,சிறுமற்றும்நடுத்தரதொழில்நிறுவனங்கள்துறையின் சார்பில் நடைபெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான சிறப்பு முகாமை நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு தொடங்கி வைத்து, பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு, புதிய தொழில் முனைவோர்களுக்கு ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவிகளை வழங்கி விழா பேருரையாற்றினார். இவ்விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் சீ.கதிரவன், ந.தியாகராஜன், எஸ்.ஸ்டாலின் குமார் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்டம். மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா பொது கூட்டம் நல்லத்துக்குடியில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பேசினார். உடன் போடி.காமராஜ், ஜெக.வீரப்பாண்டியன், ஜி.என்.ரவி, எஸ்.செல்வமணி, ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, என்.இளையபொருமாள், குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.